## அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தால்
## அன்னைத் தமிழ்முற்ற போட்டி 2022

**தேசிய மட்டத்திலான அன்னைத் தமிழ்முற்றப் போட்டிகள் மற்றும் இணையவழி நிகழ்வுகள் 2022**

வணக்கம் !
வளாகங்களின் கவனத்திற்கு
அன்புடையீர்,
அன்னைத் தமிழ் முற்றப் பணிக் குழுவினராகிய நாம் நீண்டதோர் இடைவேளையின் பின்னர், மீண்டும் மின்னஞ்சல் வழியாக உங்களைச் சந்திப்பதில் மகிழ்வடைகிறோம்.

எதிர்வரும் 2022ம் ஆண்டுக்கான எமது திட்டமிடல்களை
உங்களோடு பகிர்ந்து கொள்கிறோம்.

புதிய ஆண்டின் ஆரம்பத்தோடு சில நிகழ்வுகளும்,போட்டிகளும்
தமிழர்திருநாள் சிறப்பு நிகழ்வும் அமையவுள்ளது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

பிறக்கவுள்ள புத்தாண்டின் முதல் நிகழ்வாக மழலையர் மற்றும் சிறுவர் பாடல் இடம்பெறும். சினிமாப் பாடல்கள் முற்றாகத் தவிர்த்தல் வேண்டும். தொடர்ந்து ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி போன்ற இணையவழி நிகழ்வுகளுடன் தைத்திருநாள் நிகழ்வுகளும் கடந்த வருடம் நடந்தது போன்று இடம் பெறும்.

வழங்கப்படும் ஆத்திசூடி,கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி போன்றன தமிழ்மொழியின் தொன்மையும் நீதி இலக்கணமும் போற்றிப் பேணப்பட வேண்டிய அவசியமுள்ளதால் புலம்பெயர் இளையவர்களின் மொழித்திறனைக் கருத்திற்கொண்டு வழங்குகிறோம்.

**மேலே கூறப்பட்ட நிகழ்வுகள் இடம்பெறும் காலத்தை கீழ்க்காணும் 3 அட்டவணைகளில் பார்வையிலாம்.**

| இணையவழி நிகழ்வுகள் 08.01சனி \ 09.01ஞாயிறு 2022 | | | | |
|---|---|---|---|---|
| காலம் | நிகழ்வு | பிறந்த ஆண்டு | வளாகம் | |
| **08.01.22 சனி** | மழலையர் பாடல் | 2017- 2018 பிறந்தோர் | அனைத்து வளாகங்கள் | 3 - 5 நிமிடம் |
| **09.01.2022 ஞாயிறு** | சிறுவர் பாடல் | 2016 பிறந்தோர் | அனைத்து வளாகங்கள் | 3 - 5 நிமிடம் |
| 08.01.22 சனி 09.01.22 ஞாயிறு | ஆத்திசூடி | 2015 பிறந்தோர் | அனைத்து வளாகங்கள் | |
| 08.01.22 சனி 09.01.22 ஞாயிறு | கொன்றைவேந்தன் | 2014 பிறந்தோர் | அனைத்து வளாகங்கள் | |
| 08.01.22 சனி 09.01.22 ஞாயிறு | மூதுரை | 2013 பிறந்தோர் | அனைத்து வளாகங்கள் | |
| 08.01.22 சனி 09.01.22 ஞாயிறு | நல்வழி | 2012 பிறந்தோர் | அனைத்து வளாகங்கள் | |

| | | | | |
|---|---|---|---|---|
| 08.01.22 சனி<br>09.01.22 ஞாயிறு | தைத்திருநாள் செய்யும் நோக்கம் யாரல்,யாருக்காகதைத்திருநாள் கொண்டாடப்படுகிறது?<br>தைதிருநாள் எத்தகைய திருநாள்? | ஆண்டு<br>5 | வைத்வேத்,அஸ்கர் பாரும்,<br>திறம்மன்,புளோறா,ஸ்ரவங்கர்,<br>உல்ஸ்ரான்வீக் | 5 - 10<br>நிமிடம் |
| 08.01.22 சனி<br>09.01.22 ஞாயிறு | பொங்குமிடம்,கோலமிடுதல்,பொங்கல்பானை,<br>பொங்கலுக்குத் தேவையான பொருட்கள்,<br>பொங்கல் செய்யும் முறை | ஆண்டு<br>5 | ஒஸ்வோல்ட்,துரோண்யம்,<br>லோறன்ஸ்கூக்,ஒலுசுன்,தொய்யன் | 5 - 10<br>நிமிடம் |
| 08.01.22 சனி<br>09.01.22 ஞாயிறு | நிறைகுடம் வைத்தல்,வாழை,<br>தோரணம் கட்டுதல்,போன்றவவை<br>செய்வதன் நோக்கம் | ஆண்டு<br>5 | மோடன்ஸ்ரூட்,மோல்ட,பேர்கன்,<br>றொம்மன் | 5 - 10<br>நிமிடம் |
| 08.01.22 சனி<br>09.01.22 ஞாயிறு | பொங்கல் திருநாள் உணர்த்தும் தமிழர் பண்பாடுகள், விருந்தோம்பல்,<br>நன்றிகூறுதல் | ஆண்டு<br>6 | தொய்யன்,பேர்கன்,புளோரா,<br>ஸ்ரவங்கர், துரோண்யம், | 5 - 10<br>நிமிடம் |
| 08.01.22 சனி<br>09.01.22 ஞாயிறு | பொங்கல்நாள் உணவுகள்,பலகாரங்கள்,<br>முக்கனிகள்,படைத்தல்,வணங்குதல் | ஆண்டு<br>6 | வைத்வேத்,மோட்டன்ஸ்ரூட்,<br>லோறன்ஸ்கூக், ஒலுசுன் | 5 - 10<br>நிமிடம் |

**அவதானத்தில் கொள்ளவும்**

**அட்டவணையில் காட்டப்பட்ட நாட்களில் நிகழ்வுகள் இடம்பெறும்.மழலையர் மற்றும் சிறுவர்பாடல் தவிர்ந்த ஏனைய நிகழ்வுகள் சனி/ஞாயிறு ஆகிய இரு தினங்களிலும் இடம்பெறும். நிகழ்வுகள் சனியன்று பிற்பகல் 15.00 மணிக்கும் ஞாயிறு முற்பகல் 11.00 மணிக்கும் ஆரம்பிக்கும். எனினும் மாணவர்களின் பதிவை அடிப்படையாகக் கொண்டு நிகழ்வுகள் ஆரம்பிக்கும் காலம், நேரம் என்பன பதிவுகளின் பின்னர் அறியத்தரப்படும். பதிவுகளுக்கான விண்ணப்பதில் மாணவர்கள் விருப்பிய நாளைத் தெரிவு செய்தாலும், தேவை கருதி மாற்றம் செய்யப்படும். விண்ணப்பப் படிவம் விரைவில் அனுப்பி வைக்கப்படும்.**

**குறிப்பு**

**மழலையர், சிறுவர் பாடல்களில் சினிமாப் பாடல்கள் முற்றாகத் தவிர்தல்.**
**ஆத்திசூடிகளில் ஐந்தினை (5)ஒப்பித்தல் விருப்பத்தக்கது. பொருள்விளக்கம் தேவையற்றது.**
**கொன்றைவேந்தனில்ருந்து ஆறினை (6)ஒப்பித்தல் விரும்பத்தக்கது. பொருள்விளக்கம் தேவையற்றது.**
**மூதுரையில் ஒன்றை (1)ஒப்பித்தல் விரும்பத்தக்கது. பொருள்விளக்கம் தேவையற்றது.**
**நல்வழியில் ஒன்றை (1)ஒப்பித்தல் விரும்பத்தக்கது. பொருள்விளக்கம் தேவையற்றது.**

| இணையவழி தைத்திருநாள் நிகழ்வுகள் 16.01.2022 ஞாயிறு | | | | |
|---|---|---|---|---|
| காலம் | நிகழ்வு | வகுப்பு | வளாகம் | நேரம் |
| **16.01.2022 ஞாயிறு** | மாட்டுப்பொங்கல்,எப்பொழுது,,ஏன்,யாரால், யாருக்கு,எங்கே,எவ்வாறு செய்யப்படுகிறது? | ஆண்டு 6 | றொம்மன்,அஸ்கர் பாரூம்,திறம்மன், மோல்ட, உல்ஸ்ரான்வீக் | 5 - 10 நிமிடம் |
| **16.01.2022 ஞாயிறு** | தமிழர் பாரம்பரிய உடைகள்<br>தமிழர் உணவுகள்<br>தைத்திருநாள் தொடர்பான பாடல்கள் | ஆண்டு 7 | ஒவ்வொரு வளாகமும் மேற்குறிப்பிட்ட தலைப்புகளில் ஏதாவது ஒன்றினைப் பற்றி எடுத்துரைத்தல் | 5 - 10 நிமிடம் |
| **16.01.2022 ஞாயிறு** | தைத்திருநாள்<br>தமிழர் பண்பாடு<br>தமிழ்மொழி | ஆண்டு 8 | ஒவ்வொரு வளாகமும் மேற்குறிப்பிட்ட தலைப்புகளில் ஏதாவது ஒன்றினைப் பற்றி கவிதை மொழிதல் | 5 - 10 நிமிடம் |
| **16.01.2022 ஞாயிறு** | பட்டிமன்றம் \ கருத்துக்களம்<br>இணையமுற்றத்தில் தமிழ்மொழி கற்றல் மாணவர்களைத் தூண்டுவதாவுள்ளதா - தூங்கவைக்கின்றதா? அல்லது "சமூக வலைத்தளங்களில் தனிமனிதப் பதிவுகள் ஊடக சுதந்திரத்தை மதிக்கிறதா? மிதிக்கிறதா? | ஆண்டு 9-10 | ஒவ்வொரு வளாகமும் கொடுக்கப்பட்ட தலைப்பில் பட்டிமன்றம் அல்லது கருத்துக்களம் செய்யலாம்வ் | 5 - 10 நிமிடம் |
| **16.01.2022 ஞாயிறு** | கருத்துக்களம்: அண்மைக்காலங்களில் ஈழத்தமிழர்களின் உரிமைக்குரல் சமூக ஊடகங்களில் திட்டமிட்டு முடக்கப்படுவது ஏன்? அதனை எதிர்கொள்வது எப்படி? | ஆண்டு 11-12 | ஒவ்வொரு வளாகமும் கொடுக்கப்பட்ட தலைப்பில் கருத்துக்களம் செய்யலாம் | 5 - 10 நிமிடம் |

2022 ல் நடத்தப்படவுள்ள இணையவழி நிகழ்வுகள் - போட்டிகள் தொடர்பான மேலதிக தகவல்கள் காலக்கிரமத்தில் அறியத்தரப்படும்.

கடந்த வருடம் போன்று வளாகங்களினதும், ஆசியர்கள், நிருவாகிகள், பெற்றோர் அனைவரினதும் ஒத்துழைப்பினை நல்கி நிற்கிறோம்.

போட்டிகள் தொடர்பான விபரங்கள் உட்பட பேச்சுக்கள், திருக்குறள் அனைத்தும் விரைவில் அனுப்பிவைக்கப்படும்.

**ஆத்திசூடி,கொன்றைவேந்தன்,மூதுரை,நல்வழி என்பனவற்றின் இணைய இணைப்பு இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.**

https://www.poopathi.no/web/sites/default/files/tale/2022/nikalvu/klasse1_aaththisoodi.pdf

https://www.poopathi.no/web/sites/default/files/tale/2022/nikalvu/klasse2_kontraiventhan.pdf

https://www.poopathi.no/web/sites/default/files/tale/2022/nikalvu/klasse3_moothurai.pdf

https://www.poopathi.no/web/sites/default/files/tale/2022/nikalvu/klasse4_nalvazhi.pdf

கிடைக்கப்பெறும் உள்ளடகத்தினை உரியவர்களுக்கு விரைவாக பரிமாறும் வண்ணம் அன்போடு வேண்டுகிறோம்.

இவ்வண்,

அன்னைத் தமிழ்முற்றப் பணிக்குழு 2022